# OUR நம் குரல் VOICE

இஸ்லாம் எங்கள் வழி
இன்பத்தமிழ் எங்கள் மொழி

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அதிகாரத்துவ ஏடு ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பிதழ் October 2013






# சிரமப்படும் மக்களுக்கு வழிகாட்டி உதவுக!

## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்களுக்குச் செயலாளர் வேண்டுகோள்!

சிங்கப்பூரில் நல்ல வளர்ச்சி அடைந்து வரும் அமைப்புகளில் ஒன்றான ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், நல்லுதாரணமிக்க நல்ல பணிகளில் ஈடுபட்டு வருவதாகச் செயலாளர் மு. அ. மசூது பாராட்டியுள்ளார். ஆகவே லீக், ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பணியாற்றிட நாட்டங்கொண்டுள்ளதாக லீக் செயலாளர் விருப்பம் தெரிவித்தார்.

சங்கம் ஏற்பாடு செய்த 'சட்டமும் நீங்களும்' என்ற கருத்தரங்கில் பிரதான விருந்தினராகக் கலந்து கொண்ட செயலாளர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார். இக்கருத்தரங்கில் வழக்கறிஞர் ஆர். கலாமோகன் அவர்கள் கலந்து கொண்டு, பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய அம்சங்கள் குறித்த வினாக்களுக்கு எளிமையான முறையில் விளக்கம் அளித்தார்கள்.

பல நல்ல கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வரும் சங்கம், மக்களுக்குத் தேவைப்படும் அம்சங்களில் கவனம் செலுத்தி வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று என்று குறிப்பிட்ட செயலாளர், மக்களுக்கு சுகாதாரம், கல்வி, வீடமைப்பு போன்ற துறைகளில் அதிக உதவியும் ஆலோசனையும் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

உதவி தேவைப்படும் இத்தகையோரை அடையாளம் கண்டு உதவுவது சிறந்த சமூகப் பணியாகக் கருதப்படும் என்றும் செயலாளர் குறிப்பிட்டார்.

கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய சங்கத் தலைவர் முனைவர் எம். ஏ. காதர் 'O' நிலை மாணவர்களுக்கு உதவிடும் கணக்குப் பட்டறை ஒன்றிற்கும், சுகாதார நிகழ்ச்சி ஒன்றிற்கும் தமது சங்கம் ஏற்பாடு செய்து வருவதாகவும் மாணவர்கள் இதில் பெருவாரியாகக் கலந்து கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார்.

## 'The Law and You' -

A Seminar on common Legal issues was organized recently by Jamal Mohamed College Alumni Association (Singapore). The seminar was conducted by renowned Lawyer, Mr R Kalamohan.

Singapore Kadayanallur Muslim League's (SKML's) General Secretary, Haji M A Mashuthoo, who was the chief Guest spoke at the event and congratulated the organizers for organising a very useful seminar to educate members on their legal rights and on matters pertaining to law. He added that SKML would be keen to collaborate with Jamal Mohamed College Alumni in future especially in providing education and assistance to our members in the areas of Health, Education and Housing.

Mr R Kalamohan conducted the seminar in his usual, simple Q & A (Question & Answer) which enabled the laymen present at the seminar to understand Law better.

Dr Abdul Kader, the President of the Alumni informed that his organization would be conducting next two workshop for GCE 'O' Level students and a health clinic.


